# ``மணிப்பூர் குறித்து பேசாமல், வேறு பிரச்னைகளைப் பேசுகிறார் குஷ்பு" - குற்றம்சாட்டும் ஹென்றி திபேன்

Published: 01.08.2023 7 AM

**``மணிப்பூர் விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் இருந்த தேசிய மனித உரிமை ஆணையம், மகளிர் ஆணையம், குழந்தைகள் நல ஆணையம், சிறுபான்மையினர் ஆணையம், எஸ்.சி-எஸ்.டி ஆணையமும், செயல்படாத நிலையிலுள்ள அதன் உறுப்பினர்களும் ராஜினாமா செய்ய வேண்டும்." - ஹென்றி திபேன்**



``மணிப்பூர் மாநில வன்முறை விவகாரத்தில் அனைத்து ஆணையங்களும் செயலிழந்து விட்டன, தேசிய மனித உரிமை ஆணையத் தலைவராக இருப்ப தற்கு அருண் மிஸ்ரா தகுதியற்றவர்..." என்று மனித உரிமை செயற்பாட்டாளரும், மதுரை மக்கள் கண்காணிப்பக இயக்குநருமான ஹென்றி திபேன் குற்றம்சாட்டியிருக்கிறார்.

செய்தியாளர்களிடம் பேசிய ஹென்றி திபேன், "மணிப்பூர் மாநிலத்தில் மே மாதம் முதல் குழந்தைகள், பெண்கள், சிறுபான்மையினர், பட்டியலினத்தவர்மீது மனித உரிமை மீறல் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால், இதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆணையங்கள் மணிப்பூர் வன்முறையைக் கண்டுகொள்ளவில்லை.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மணிப்பூர் கலவரம் குறித்து வேதனையை வெளிப்படுத்திய பிறகுதான் தேசிய மனித உரிமை ஆணையம் மணிப்பூர் பிரச்னை குறித்த புகாரில் தாமதமாக நடவடிக்கையைத் தொடங்கியது.

தேசிய மனித உரிமை ஆணையம், மகளிர் ஆணையம், சிறுபான்மையினர் ஆணையம், குழந்தைகள் ஆணையம், எஸ்.சி-எஸ்.டி ஆணையம் என எந்தவோர் ஆணையமும் மணிப்பூருக்குச் செல்லவே இல்லை.

தேசிய மனித உரிமை ஆணையம் சுதந்திரமாகச் செயல்படவில்லை. அதன் உறுப்பினர் தேர்வு வெளிப்படையாக நடைபெறவில்லை என 2016-ம் ஆண்டில், 'தேசிய மனித உரிமை ஆணைய நிறுவனங்களுக்கான கூட்டமைப்பு' அங்கீகாரம் தரவில்லை. இது போன்று இந்த ஆண்டும் அங்கீகாரம் தரவில்லை.

அங்கீகாரம் முறையாகப் பெறாத ஆணையமாக தேசிய மனித உரிமை ஆணையம் இருக்கிறது. மிகக் குறைகளுடன் இது போன்று ஆணையங்கள் இருக்கும் நிலையில்,

செயல்படாமல் போனது இன்னும் கேவலமானது. தேசிய ஆணையங்கள் ஜனநாயகத்துக்கு விரோதமாகச் செயல்படுகின்றன.

கட்சிப் பதவியில் உள்ளவருக்கு மகளிர் ஆணைய உறுப்பினர் பதவி அளிக்கிறார்கள், மணிப்பூர் விவகாரம் குறித்து தேசிய மகளிர் ஆணையத்துக்கு வந்த புகாரைக் கண்டுகொள்ளாமல் இருந்த குஷ்பு, தற்போது வேறு வேறு பிரச்னைகளைப் பேசுகிறார்.

மணிப்பூர் பிரச்னை விவகாரத்தில் நடவடிக்கைகள் எடுக்காத மனித உரிமை ஆணையத்தின் தலைவர் அருண் மிஸ்ரா மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் ராஜினாமா செய்ய வேண்டும்.

அருண் மிஸ்ரா தேசிய மனித உரிமை ஆணையத் தலைவராக இருப்பதற்கு அருகதை இல்லை, மணிப்பூர் விவகாரத்தைக் கண்டுகொள்ளாமல் இருந்த தேசிய மனித உரிமை ஆணையம், மகளிர் ஆணையம், குழந்தைகள் நல ஆணையம், சிறுபான்மையினர் ஆணையம், எஸ்.சி-எஸ்.டி ஆணையம் ஆகியவையும், செயல்படாத நிலையிலுள்ள அதன் உறுப்பினர்களும் ராஜினாமா செய்ய வேண்டும். மணிப்பூர் பிரச்னை குறித்து ஐ.நா சபையில் நிச்சயம் பேசப்படும்" என்றார்.

https://www.vikatan.com/government-and-politics/governance/activist-henry-dipen-press-meet-at-madurai-on-manipur-issue